# “பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம்”

## கல்வியமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தினால் தரம் 1 ற்கு பிரவேசிக்கின்ற பிள்ளைகளுக்கென அறிமுகப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டம்

**கல்வி அமைச்சு**

2016

# உள்ளடக்கம்


1. அறிமுகம்

2. பாடசாலைக்கு பிரவேசிக்கும் பிள்ளைகளை இனங்காண வேண்டியதன் அவசியம் யாது?

3. பாடசாலை மட்டத்தில் ஆயத்தம்

4. ஆசிரியரினால் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள்

5. செயற்பாடுகளை அமுல்படுத்துதல்

6. பிள்ளைகள் தொடர்பாக அறிக்கைகளைப் பேணுதல்

7. செயற்பாடுகளும் தொடர்பான துறைகளும்

8. ஒரு குழுவுக்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான மாதிரித்திட்டம்.

9. செயற்பாடுகள்

10. செயற்பாடுகள் தொடர்பாக அவதானிப்புப் படிவம்.

11. பிள்ளை, குடும்பம் தொடர்பான தகவல்கள்

12. பாடசாலையின், வகுப்பறையின் மற்றும் ஆசிரியரின் ஆயத்தம்

13. ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தற் கோவை

# "பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம்"

## 1.0 அறிமுகம்

பாடசாலைச் சூழலுக்குப் பிரவேசிக்கின்ற பிள்ளைகளிடம் இருக்க வேண்டிய தயார் நிலையை இரண்டு பிரதான இயல்புகளுடன் தொடர்புபடுத்த முடியும். பிள்ளைகளிடம் இயல்பாகவே வளர வேண்டிய இசைவாக்கமும், தேவையான தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வதுமே அவை இரண்டுமாகும். அவ்வியல்புகளை மூன்று பரிமாணங்களில் நோக்கலாம். அதாவது, பிள்ளையிடமுள்ள பாடசாலைக்கான தயார்நிலை, பாடசாலையில் பிள்ளைகளுக்குள்ள தயார் நிலை, குடும்பத்தின் அல்லது பெற்றோரின் தயார்நிலை ஆகியனவாகும். பிள்ளையிடமுள்ள பாடசாலைக்கான தயார்நிலையைக் கண்டறிதலை அடிப்படையாகக்கொண்டுள்ள இச்செயற்பாட்டில் மிகவும் முறையாகவும், ஆய்வு ரீதியாகவும் அபிவிருத்தி செய்துள்ள செயற்பாடுகளின் தொகுதியைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. இச்செயற்பாடுகள் 1998 கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் செயற்படுத்தப்படும் பிள்ளைகளை இனங்காணல் நிகழ்ச்சித்திட்டம் சார்ந்ததாக நடைபெறும் அபிவிருத்தி எனவும் அறிமுகப்படுத்தலாம்.

பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம் எனும் இந்நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகம் செய்வதன் அடிப்படை நோக்கம், முன்பள்ளியிலிருந்து பாடசாலைக்கு இடம்மாறும் போது பிள்ளையிடம் நிகழ வேண்டிய மாற்றங்களை இலகுபடுத்தவும், பிள்ளைகளிடம் எந்தளவு அடிப்படை அனுமதித் திறன்கள் விருத்தியடைந்துள்ளது என அறிந்துகொள்ள ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஒத்துழைப்பதற்குமாகும். மேலும், இதன் மூலம் முதலாந் தரத்தில் புதிதாக சேர்ந்து கொள்ளும் பிள்ளைகளின் ஆற்றல் மற்றும் ஆற்றலின்மைகளினதும் இயல்புகளை இனங்காண்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், அதன்மூலம் வகுப்பறையின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை எளிதாக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் இச்செயன்முறையினூடாக வெளிப்படுகின்ற பிள்ளைகளின் திறன்களை உரிய வயதிலுள்ள வேறு பிள்ளைகளுடன் ஒப்பிட்டுப்பார்ப்பதற்கு பயன்படுத்தக் கூடாதென்பதை உறுதியாக நினைவிற் கொள்ள வேண்டும். இச்செயற்பாடுகளின் பெறுபேறுகளை முதலாம் தரத்தின் நாளாந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைக்க வேண்டும் என்பதுடன், இதன் மொத்த விளைவுகளை பிள்ளைகளின் ஒட்டுமொத்த விருத்தியையும் இலக்காகக் கொண்ட செயற்பாட்டுடன் தொடர்புபடுத்துவது ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

## 2.0 பாடசாலைக்கு அனுமதிக்கப்படும் பிள்ளைகளை இனங்காண வேண்டியதன் அவசியம் யாது?

பாடசாலைக்கு அனுமதிக்கப்படும் பிள்ளைகளின் வாழ்வில் அது ஒரு முக்கிய நிகழ்வாகும். பிள்ளைகள் பிரவேசிக்கின்ற பாடசாலைச் சூழல் புதியதாகும். அவர்கள் பழகிய மூத்தோர், ஆசிரியர்கள், நண்பர்கள் எவரும் அங்கில்லை. பழக்கமற்ற இப்புதிய சூழலில் அவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடும். அதன் காரணமாக அவர்களில் விரக்தியோ, பதகளிப்போ ஏற்படக் கூடும். இத்தகைய பாதகமான அனுபவங்கள் அவர்களது முன்னேற்றத்திற்கு தடையாக அமையும். இச்செயற்பாட்டினூடாக மிகவும் இலகுவான சில செயற்பாடுகளை முன்வைத்து தரம் 1ல் பிரவேசிக்கின்ற பிள்ளைகளுக்கு பாடசாலைச் சூழலுடனும், ஆசிரியர்களுடனும், அடுத்த பிள்ளைகளுடனும் தொடர்புபட்டு செயற்படவும் விருப்பமான, மகிழ்ச்சிகரமான அனுபவங்களை வழங்குவதற்கான சந்தர்ப்பங்களை அமைத்துக் கொடுக்கவும் முயற்சிக்கப்படுகின்றது. இவற்றின் மூலம் பாடசாலைக் கல்விக்காக உடன்பாடான ஆரம்பமொன்றை அமைத்துக்கொடுக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறே, முதலாந் தரத்தில் ஆசிரிய ஆசிரியைகளுக்கும் புதிய பிள்ளைகள் குழுவொன்றுடன் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிப்பது சவாலான அனுபவமாகும். தமது வகுப்பிற்கு புதிதாக வரும் பிள்ளைகள் யார்? அவர்களது தேவைகள், விருப்பு வெறுப்புக்கள் யாவை? அவர்களது இயலுமைகள் எவை? போன்று தமது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கு தேவையான பிள்ளைகள் தொடர்பான அடிப்படை தரவுகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தலும் இச்செயன்முறையால் எதிர்பார்க்கும் மற்றொரு நோக்கமாகும்.

முன் பள்ளிகளில் கற்ற பிள்ளைகளும், எந்த ஒரு முன்பள்ளியில் கற்காத பிள்ளைகளும், நகர்ப்புற, கிராமப்புற சூழல்களைச் சேர்ந்த பிள்ளைகளும், வசதியான, வசதி குறைந்த வீடுகளிலிருந்து வரும் பிள்ளைகளும் ஒரே பாடசாலையில் தரம் 1இல் சேர்கின்றனர். இவ்வாறு பல்வேறு சூழல்களிலிருந்து வருகின்ற பிள்ளைகள் மத்தியில் பல்வேறு வேறுபாடுகள் காணப்படக்

கூடும். அவ்வேறுபாடுகளை விளங்கிக் கொண்டு அவற்றை குறைவாக்க நடவடிக்கை எடுத்து பொதுவான ஒரே பாடவிதானத்தைக் கற்க பிள்ளைகளை வழிப்படுத்துவது ஆசிரியர்களின் பொறுப்பாகும். இச்செயன்முறையில் மேற்படி பணியை எளிதாக்க சந்தர்ப்பம் வழங்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

பிள்ளைகளின் இயலுமைகளை சரியாக திசைகோட்படுத்துவதற்கும், பலவீனங்களுக்கு பரிகாரம் காண்பதற்கும் சிறு பராயத்திலேயே தலையிட வேண்டுமெனவும், அவ்வாறு தலையிடுவது வெற்றிகரமான பெறுபேறுகளை வழங்கியுள்ளது எனவும் பெரும்பாலான ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே பிள்ளைகளிடத்தில் விருத்திசெய்யப்பட வேண்டிய அடிப்படை வாழ்க்கைத் திறன்கள் சிறு பராயத்திலேயே விருத்தி செய்யப்படாவிட்டால் வாழ்க்கையின் பிற்பட்ட காலங்களில் அத்திறன்களை விருத்தி செய்ய முடியாதென்பது பெரும்பாலான உளவியலாளர்களின் கருத்தாகும். பிள்ளைகளின் பலங்களையும் பலவீனங்களையும் இனங்காண்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பங்களை அமைத்துக்கொடுப்பது இப்பொறிமுறையின் மற்றொரு நோக்கமென கூறலாம்.

மேலும் இவ்வாறான செயன்முறையின் மூலம் பெற்றோரிடம் பிள்ளைகளின் விருத்தி தொடர்பாக நிலவுகின்ற மறையான மனப்பாங்குகளை அகற்றுவதும், முன்பள்ளி ஆசிரியர்களை பிள்ளைகளின் அடிப்படை வாழ்க்கைத் தேர்ச்சிகளை விருத்தி செய்வதில் கரிசனை காட்டவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக பாடசாலையின் தயார் நிலையையும், குடும்பத்தின் தயார் நிலையையும் இனங்காண்பதற்காக விருத்தி செய்துள்ள நடவடிக்கைகளும், பாடசாலைக் கல்வியின் ஆரம்பக் கட்டங்களில் இடம்பெற வேண்டிய பிள்ளைகளின் முழுமையான விருத்தியில் நேரிடையாக செல்வாக்கு செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## 03. பாடசாலை மட்டத்தில் ஆயத்தம்

1. ''பாடசாலை கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆயத்தம்'' என்றவாறு அறிமுகப்படுத்தப்படும் இந்நிகழ்ச்சித்திட்டம் அதிபரின் தலைமையில் திட்டமிட்டு ஒழுங்கமைப்புடன் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

2. இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக முதலாந் தரத்தில்/ முதலாம் பிரதான கட்ட ஆசிரியர்களுடன் கலந்துரையாடி தேவைகளை இனங்காண்பதற்கும் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கும் அதிபர் தலைமை தாங்குதல் வேண்டும்.

3. பிள்ளைகளுக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பத்தினை வழங்குவதற்காக பாடசாலையினுள் இருக்கவேண்டிய ஆயத்தத்தினை இனங்காண்பதற்கு பயன்படுத்தக்கூடிய பத்திரங்கள் இதில் உள்ளடக்கப்படும். உரியவாறு அப்பத்திரங்களை பயன்படுத்தி பாடசாலையினுள் இருக்க வேண்டிய ஆயத்தத்தினை இனங்காண வேண்டும். அதேபோல் முன்னேற்றப்பட வேண்டிய அங்கங்கள் தொடர்பாக எடுக்கவேண்டிய வழிமுறைகளை கவனத்திற் எடுத்தல் வேண்டும்.

4. முதலாம் தரத்தில்/ முதலாம் பிரதான கட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்கு தகைமையுள்ள பிள்ளைகள் தொடர்பாக தகவல்களை உரிய ஆசிரியர்கள் போதுமான அளவு காலத்திற்கு முன் வழங்குதல் வேண்டும்.

5. ஆரம்பக்கல்வி தொடர்பாக திறமையும் அனுபவமும் உள்ள ஆசிரியர்கள் முதலாந் தரத்தில்/ முதலாம் பிரதான கட்டத்திற்கு நியமிக்கப்படல் வேண்டும்.

6. முதலாந் தரத்தில்/ முதலாம் பிரதான கட்டத்திற்கு நியமிக்கப்பட்ட ஆசிரியரை அவ்வருடத்தில் அவரின் வகுப்பை அல்லது பாடசாலையை மாற்றக்கூடாது.

7. பிள்ளைகளை பாடசாலைக்கு அனுமதித்தலுடன் இந்நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

8. இதில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பிள்ளைகளை இனங்காணும் நிகழ்ச்சித்திட்டத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும். அதற்கு முன் இந்நிகழ்ச்சியின் நோக்கங்கள் மற்றும் செயல்முறைகள் தொடர்பாக பெற்றோர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும்.

9. இந்நிகழ்ச்சித்திட்டம் செயன்முறைப்படுத்தும் முறைகள், பிள்ளைகள் தொடர்பான அறிக்கைகளை வைத்துக் கொள்ளும் முறை மற்றும் அவ் அறிக்கை பிள்ளைகளின் பூரண விருத்திக்கு பயன்படுத்தும் முறைகளை அதிபர் அல்லது ஆரம்ப பிரிவு அதிபர் மூலம் மிகவும் அமுல்படுத்த மேற்பார்வை செய்தல் வேண்டும். அது பாடசாலை உள்ளக மேற்பார்வை செயல்முறையில் ஒரு பகுதியாக கவனிப்பது பொருத்தமாகும்.

## 4.0 ஆசிரியர்களினால் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள்

1. பிள்ளைகள் பல்வவகைப்பட்டவர்கள் எனவும் அவர்கள் ஒருவருக்கொருவர் வித்தியாசமான வேறுபாடுடையவர்கள் எனவும் அவ்வேறுபாடுகள் மற்றும் வித்தியாசங்கள் வகுப்பறையில் சிநேகமான முறையிலும் செயற்பாட்டுடனான சூழலை ஏற்படுத்துகின்றது எனவும் ஆசிரியர் நம்புதல் வேண்டும். அந் நம்பிக்கை இந்நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு சக்தியுடைய அடிப்படையினை வழங்கும்.

2. இந்நிகழ்ச்சித்திட்டத்தில் முதலாந் தரத்தில்/ முதலாம் பிரதான கட்டத்திற்கு அனுமதி பெறும் பிள்ளைகளின் பல்வகைமை பற்றி விளக்கத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசிரியர்கட்கு உள்ள இடவசதியை பரந்ததாகச் செய்வதே பிரதான நோக்கமாகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரை வகுப்பறை ஆசிரியர் தொடர்புபட்டு நடவடிக்கைகளில் ஈடுபடல் வேண்டும்.

3. முதலாந் தரம்/ முதலாம் பிரதான கட்டப் பொறுப்பு ஆசிரியர், பாடசாலையிலுள்ள ஏனைய ஆசிரியர்கள், அதிபர் மற்றும் பெற்றோர்களை தொடர்புபடுத்தி இந்நிகழ்ச்சித்திட்டத்தினை திட்டமிடுதலுடன் செயற்படுத்துதல் வேண்டும். அதேபோல் இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பெற்றோர்கள் அறிவுறுத்தல்பட வேண்டும்.

4. பிள்ளைகள் சுதந்திரமாக, இலகுவாக செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு போதுமான நேரத்தை வழங்கி இந்நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்த வேண்டும். முழு நிகழ்ச்சித்திட்டத்திற்காக உள்ளடக்கப்பட்டுள்ளவரை 02 வாரகாலத்திற்கு உட்படுத்துதல் பொருத்தமாகும்.

5. பிள்ளைகளுடன் சிறிய குழுக்களாக நடவடிக்கைகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் தேவைக்கேற்றவாறு ஏனைய ஆசிரியர்களின் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்ள முடியும். விஷேடமாக முதலாம் தரத்திற்கு பொறுப்பான ஆசிரியர் பிள்ளைகளின் குழுக்களுடன் இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரித்தான செயற்பாடுகளில் செயற்படுத்தும் போது ஏனைய பிள்ளைகள் வேறு செயற்பாடுகளில் (இவ் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பொருத்தமற்ற) ஈடுபடுத்துவதற்கு ஏனைய ஆசிரியர்களின்/ ஆசிரிய உதவியாளர்களின் உதவி தேவைப்படும்.

6. பாடசாலை சமூகத்திற்கு பொருந்தக்கூடிய வசதியான உடையை அணிந்து இச்செயன்முறையில் பங்கு கொள்வதற்கு பிள்ளைகளுக்கு வாய்ப்பளிக்குக.

7. பிள்ளைகளை இனங்காண்பதை இலகுவாக்குவதற்காக அவர்களை “விருப்பமாயின்” குறிப்பிடப்பட்டுள்ள அட்டைகளை தயாரித்து பயன்படுத்தவும்.

8. பிள்ளைகளுடன் செயற்பாடுகளில் ஈடுபடும் போது அவர்களின் பாதுகாப்பு தொடர்பாக கவனம் செலுத்தவும்.

9. மிக இலகுவாக சுற்றாடலில் இருந்து பெறக்கூடிய பொருட்களை செயற்பாடுகளுக்காக பயன்படுத்துதல் பொருத்தமானது. விஷேடமாக “விளையாட்டு வீடு” தற்காலிகமாக, எனினும் பிள்ளைகளுக்கு உளத்திருப்தி ஏற்படக்கூடியவாறு தயாரிக்கப்படக்கூடியதுடன் அதிக செலவுகள் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கூடாரம் அமைப்பதை விட்டும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

10. செயற்பாடுகள் பூரணப்படுத்துவதற்கு இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் விளையாட்டு வீட்டை பயன்படுத்துவதற்கு முயற்சி எடுக்கவும்.

**05. செயற்பாடுகளை அமுல்படுத்தல்**

1. முதலாம் தரத்திற்கு அனுமதிக்கப்படடுள்ள பிள்ளைகளை 10 பேர் வீதம் குழுக்களாக்குக. அந்த ஒவ்வொரு குழுவுக்கும் (10பேர் வீதம்) செயற்பாடுகள் 16ஐயும் பூரணப்படுத்தல் அவசியமாகும். தேவையான இடங்களில் 10 பேர் கொண்ட குழுவினை சிறு குழுக்கள் இரண்டாக (05 பேர் வீதம்) உருவாக்கிக் கொள்ளுதல் பொருத்தமாகும்.

2. "விளையாட்டு வீடு – விளையாடுவோம் எனும் செயற்பாடு பிள்ளைகளுடன் ஆரம்பத்தில் பூரணப்படுத்தப்பட வேண்டிய செயற்பாடாகும். அதற்கு போதுமான அளவு காலத்தை ஒதுக்குதல் பொருத்தமாகும். ஒரு தரத்துக்கு புதிதாக சேர்த்துக்கொள்கின்ற பிள்ளைகளை 10 பேர் வீதம் "விளையாட்டு வீடு – விளையாடுவோம்" செயற்பாடுகளில் பங்குபற்ற செய்ய வேண்டும்.

3. "மகிழ்ச்சியடைவோம்" செயற்பாட்டை ஒரு தரத்திலுள்ள சகல பிள்ளைகளையும் ஒன்றாக எடுத்து இறுதி செயற்பாடாக அமுல்படுத்துவதே பொருத்தமானதாகும்.

4. ஏனைய செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு குறிப்பான ஒழுங்குமுறையேதும் இல்லை. அதற்காக பின்பற்றப்பட வேண்டிய திட்டமிடல் அடுத்த பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

5. விளையாட்டு வீடு – விளையாடுவோம் மற்றும் சந்தோசமடைவோம் செயற்பாடுகள் தவிர்ந்த ஏனைய சகல செயற்பாடுகளையும் 10 பேர்/ 5பேர் கொண்ட குழுவாகவே செயற்படுத்த வேண்டும்.

6. இறுதி செயற்பாட்டுக்குரிய அவதானிப்புகளை ஏனைய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போதே அறிக்கைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

**(6) பிள்ளைகள் தொடர்பான அறிக்கைகளைப் பேணுதல்**

1. செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஒவ்வொரு உபதிறன் தொடர்பாகவும் பிள்ளைகளிடமிருந்து இனங்காணுகின்ற நிலைமையை பின்வருமாறு அறிக்கைப்படுத்தல் வேண்டும்.

   - ✓✓திருப்திகரமான மட்டத்தில் உள்ளது (சிவப்பு நிறத்தில்)
   - ✓சாதாரண மட்டத்தில் உள்ளது (நீல நிறத்தில்)
   - ● உதவி தேவைப்படுகின்றது (மஞ்சள் நிறத்தில்)

2. உதவி தேவைப்படும் பிள்ளை தொடர்பாக ஆசிரியர் விஷேட கவனம் செலுத்துவதுடன் வகுப்பறை மட்டத்தில் வழங்கக்கூடிய உதவிகளை வழங்குதல் வேண்டும். அதே போல் விஷேட உதவி தேவைப்படும் பிள்ளைகள் உரிய நிறுவனங்களில் சிகிச்சையைப் பெற ஈடுபடுத்துதல் வேண்டும். (தேசிய கல்வி நிறுவகத்தின் விஷேட கல்வி அலகு, விஷேட தேவையுடை பிள்ளைகளின் பாடசாலை போன்று)

   முக்கியம் - இப்பிள்ளைகளை இனங்காணும் இந்த நிகழ்ச்சித்திட்டம் பலம் மற்றும் பலவீனமான பிள்ளை என வகைப்படுத்துவதற்கல்ல. மாறாக, சகல பிள்ளைகளையும் மிகவும் வினைத்திறனுடைய கற்றல் கற்பித்தல் செயன்முறைகளில் ஈடுபடுத்துவதற்கே ஆகும். அதற்கு அறிவுறுத்தல் கோவை இதன் இறுதியல் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் பாடசாலைக்கு அனுமதிக்கப்படும் சகல பிள்ளைகளுக்கும் பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பத்தை வழங்குவதற்கு உங்களுக்கு இயலுமாக இருக்கும்.

### (7) செயற்பாடுகளும் தொடர்பான துறைகளும்

| செயற்பாடுகள் | செயற்பாடுகள் |
|---|---|
| பேரியக்கத் திறன்கள் | ஓடுவோம், பாய்வோம், ஏறுவோம் |
| நுண் இயக்கத் திறன்கள் | வெட்டி ஒட்டுவோம், தாளை உருண்டையாக்குவோம், தாளைக் கிழிப்போம், பூ செய்வோம் |
| புரிகைத் திறன்கள் | பகுதிகளை பொருத்துவோம், நிர்மானம் செய்வோம், கோலத்தை இனங்காண்போம், எண்ணுவோம் |
| சமூகத் திறன்கள் | விளையாட்டு வீடு விளையாடுவோம், சந்தோஷமடைவோம் |
| மொழித் திறன்கள் | கதைப் புத்தகங்கள் பார்ப்போம், நிகழ்ச்சியொன்றினை கதையாக கட்டியெழுப்புவோம், கேட்போம் |
| இரசனைத் திறன்கள் | சித்திரம் வரைவோம், ஆடுவோம், பாடுவோம் |
| தனிப்பட்ட சுகாதாரமும் பழக்கங்களும் கற்றலுக்கான திறன்கள் | சுகாதாரமும் பழக்கங்களும், கற்றலுக்கான திறன்களும் |

### (8) ஒரு குழுவிற்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான மாதிரித் திட்டம்

<table>
<tr><th>முதலாவது தினம்</th><th>இரண்டாவது தினம்</th><th>மூன்றாவது தினம்</th></tr>
<tr><td rowspan="2">விளையாட்டு வீடு - விளையாடுவோம்<br>(10 வீதம்)</td><td>சித்திரம் வரைவோம்<br>(10 வீதம்)</td><td>நிகழ்வை/ கதையை கட்டியெழுப்புவோம்<br>(10 வீதம்)</td></tr>
<tr><td>வெட்டி ஒட்டுவோம்<br>(10 வீதம்)</td><td>கடதாசியை உருண்டையாக்குவோம்<br>(10 வீதம்)</td></tr>
<tr><td>ஓடுவோம், பாய்வோம், ஏறுவோம்<br>(10 வீதம்)</td><td>செவிமடுப்போம்<br>(5 வீதம்)</td><td>கோலங்களை இனங்காண்போம்<br>(10 வீதம்)</td></tr>
<tr><td rowspan="2">பகுதிகளை இணைப்போம்<br>(10 வீதம்)</td><td>எண்ணுவோம்<br>(10 வீதம்)</td><td rowspan="2">தாள் கிழிப்போம், பூக்கள் செய்வோம்<br>(10 வீதம்)</td></tr>
<tr><td>ஆடுவோம், பாடுவோம்<br>(10 வீதம்)</td></tr>
<tr><td>கதைப் புத்தகம் பார்ப்போம்<br>(10 வீதம்)</td><td>ஆக்கம் செய்வோம்<br>(10 வீதம்)</td><td>மகிழ்ச்சியடைவோம்<br>(முழு வகுப்பும்)</td></tr>
<tr><td colspan="3">செயற்பாடு<br>சுகாதாரப் பழக்க வழக்கங்களும், கற்றலுக்கான திறன்களும்</td></tr>
</table>

# விளையாட்டு வீடு - விளையாடுவோம்

பிள்ளையின் பாடசாலைக்கான தயார் நிலையை அறிந்து கொள்வதற்காக முதல் தினமே செயற்படுத்த வேண்டிய செயற்பாடாகும். ஆசிரியர் பிள்ளைகளை மிகவும் அண்மித்து அவதானிக்க வேண்டும். வகுப்பிலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கைக்கேற்ப விளையாட்டு வீடுகளை அமைத்துக்கொள்வது பொருத்தமானது. இயலுமான வகையில் இயற்கைப் பொருட்களைப் பாவித்து விளையாட்டு வீடுகளை அமைத்துக்கொள்ளவும். புதிய சூழலுக்குப் பிள்ளைகளை பழக்கப்படுத்தும் வகையில் போதியளவு காலம் இச்செயற்பாட்டில் ஈடுபடுத்துவது மிகவும் பொருத்தமானதாகும்.

**பரப்பு** - சமூகத் திறன்

**கருப்பொருள்** - விளையாட்டு வீடு

**திறன்கள்** - ஏனைய பிள்ளைகளுடனும் ஆசிரியருடனும் அன்னியோன்யமாகக் கதைத்தல்.
ஏனைய பிள்ளைகளுடன் ஒத்துழைத்து செயற்படுதல்
ஏனைய பிள்ளைகளுக்கு விருப்புடன் உதவுதல்
ஏனைய பிள்ளைகளுடன் பொருட்களை பரிமாறிக் கொள்ளல்
பல்வேறு செயற்பாடுகளில் தலைமைத்துவத்தை ஏற்று செயற்படுதல்
தாய், தந்தை போன்று வெவ்வேறு பாத்திரங்களை அபிநயத்துக் காட்டுதல்

**தேவையான பொருட்கள்** -

- பாவைகள் துணித் தொட்டில், செல்லப் பிராணிகளின் (செயற்கை) மாதிரிகள் போன்ற விளையாட்டுப் பொருட்கள்
- சிறிய மட்பாண்டங்கள், சிரட்டை, மண், களிமண், நீர், பலகைத் துண்டுகள், அடுப்புக்கல்
- பெட்டிகள், பைகள், கோப்பைகள், சிறிய உடைகள் போன்றவை
- கடதாசி பூக்கள், இயற்கைப் பூக்கள், பலா இலைகள், ஈர்க்குகள், ஸ்டோக்கள்
- விளையாட்டு பலகாரங்கள் (களி மண், வேறு பொருட்களால் செய்யப்பட்டவை)

“விளையாட்டு வீடு – விளையடுவோம்” செயற்பாட்டுக்கு அதிகமான பொருட்களை வைத்திருப்பது உசிதமானது. இவ்வாறான பொருட்களை சேர்ப்பதற்கு ஆசிரியர்களுக்கு மூத்த மாணவர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கு முதலாந் தர மாணவர்களின் அல்லது அவர்களின் பெற்றோரின் உதவியைப் பெற்றுக் கொள்வதை தவிர்ந்து கொள்ளவும். ஏனெனில், அவர்களின் பொருட்களுக்கு அவர்கள் உரிமை கொண்டாட முயற்சிப்பார்கள். இவ்விளையாட்டுப் பொருட்களை முறையாக பொதியிட்டு வைக்கவும்.

**முன்னாயத்தம்** -

பிள்ளைகள் 10 பேர் வீதம் பங்குபற்றும் செயற்பாடாகும். நிழலுள்ள இடங்களில் விளையாட்டு வீடுகளை அமைத்துக் கொள்வது உகந்தது. ஒவ்வொரு விளையாட்டு வீட்டுக்கும் இடையில் கணிசமான அளவு இடைவெளி இருத்தல் வேண்டும். விளையாட்டு வீட்டில் உபசரிப்பதற்கு களிமண், க்ளே போன்ற பொருட்களால் செய்த விளையாட்டுப் பலகாரங்களைப் பயன்படுத்துவதே பொருத்தமானதாகும்.

**செயற்பாடு (விரும்பியவாறு போதியளவு நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும்)**

**படிமுறை i** - தரம் 1ல் பிரவேசிக்கும் மாணவர்களை தரம் 2/ தரம் 3 மாணவர் ஒருவர் மூலம் வணக்கம் கூறி விளையாட்டு வீட்டுக்கு அன்புடன் வரவேற்றல்.

**படிமுறை ii** - விளையாட்டு வீட்டுக்கு பிள்ளைகளை அழைத்து வந்ததன் பின்பு பிள்ளைகளுக்கு தாம் விரும்பும் விதத்தில் விரும்பிய பொருட்களுடன் விளையாடுவதற்கு இடமளியுங்கள். (15-20 நிமிடங்கள்). இச்சந்தர்ப்பத்தில் ஆசிரியர் பிள்ளைகளின் நடத்தைகளை நன்கு அவதானிக்க வேண்டும். உதா:- அவர்கள் எவ்வகையான பொருட்களுடன் விளையாட விரும்புகின்றனர்? தனியாகவும், குழுவாகவும், செயற்படுகின்றார்களா? தாய், தந்தை போன்ற பாத்திரங்களை அபிநயத்துக் காட்டுகின்றார்களா? பொருட்களை பரிமாறிக் கொள்கின்றனரா? ஒருவருக்கொருவர் உதவுகின்றார்களா? ஒருவருடன் ஒருவர் கருத்துக்களை பரிமாறிக்கொள்கின்றார்களா? என்றவாறு அவதானிப்பில் ஈடுபடுக.

**படிமுறை iii** - “இப்போது நாம் எமது வீட்டுப் பொருட்களை ஒழுங்காக வைப்போம்” என பிள்ளைகளுக்கு ஆசிரியர் கூற வேண்டும். பின் பிள்ளைகள் அவர்கள் விரும்பிய விதத்தில் பொருட்களை ஒழுங்கு முறையில் வைப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குங்கள். (சுமார் 15-20 நிமிடங்கள் போதுமானது) மாணவர் செயற்பாடுகளுக்கு ஆசிரியர் முன்வரக் கூடாது. இருப்பினும் அவர்கள் செயற்படும் விதத்தினை அவதானிக்க வேண்டும். உதா : பிள்ளைகள் பொருட்களை ஒழுங்கு முறையில் வைக்கும் விதம் அதனை தனியாகச் செய்கின்றனரா? குழுவாக செய்கின்றனரா? தலைமைத்துவம் உருவாகின்றதா? என்றவாறு ஒவ்வொரு பிள்ளையும் தொடர்புறும் விதம் போன்றவற்றை அவதானிக்குக.

**படிமுறை iv** - பிள்ளைகள் படிமுறை i ஐயும் ii ஐயும் பூரணப்படுத்தும் போது ஆசிரியர் ஒவ்வொரு மாணவனிடமும் சென்று சுமூகமாக உரையாட வேண்டும். அப்போது பின்வரும் வினாக்களை வினவலாம். மகனின்/ மகளின் பெயர் என்ன? நீங்கள் விளையாட விரும்பும் பொருள் யாது? உங்களுக்கு பிடித்த நிறம் என்ன? நீங்கள் யாருடன் பாடசாலை வந்தீர்கள்? போன்றவாறு வினாக்களை வினவலாம்.

**படிமுறை v** - எல்லாச் செயற்பாடுகளும் முடிவுற்ற பின் கைதட்டி குழுவாக பாடலொன்றை பாடி கலைந்து செல்லல்.

சகல செயற்பாடுகளும் நிறைவுற்ற பின் பொருத்தமான உபசரிப்பொன்றினை செய்ய முடியும் (உதா:, பாற்சோறு, வாழைப்பழம் போன்றவற்றை பரிமாற முடியும்). இதற்கு மூத்த மாணவர்களின் உதவியை நாடலாம்.

**பிள்ளைகள் பாடசாலைக் கல்விக்கு காண்பிக்கும் தயார் நிலையை அறிந்து கொள்ளும் செயல் முறையின் முதற் செயற்பாடு “விளையாட்டு வீடு –விளையாடுவோம்”. ஆகவே இதன் பிரகாரம் ஆசிரியர்கள் பிள்ளைகளை உரிய திறனின் கீழ் அவதானிக்க வேண்டியிருந்தாலும், ஒவ்வொரு திறன்கள் தொடர்பாக பிள்ளைகளின் அறிக்கையை வைத்திருத்தல் அவசியமாகும்.**

## ஓடுவோம், பாய்வோம், ஏறுவோம்

பிள்ளைகள் பாடசாலைக்கு பிரவேசித்த பின்பு விளையாட்டு வீடு செயற்பாட்டுக்கு அடுத்ததாக நடைமுறைப்படுத்தக்கூடிய பொருத்தமான செயற்பாடாகும். ஒரு தடவைக்கு 10 பிள்ளைகள் வீதம் பயன்படுத்திக் கொள்வது பொருத்தமானது. (பாடசாலையின் விளையாட்டு முற்றம் போதுமானதாக இல்லாதிருப்பின் அருகே அமைந்துள்ள ஒரு பாடசாலையின் அல்லது முன் பள்ளியின் விளையாட்டு முற்றத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்).

**பரப்பு** - பேரியக்கத் திறன்

**கருப்பொருள்** - விளையாட்டு முற்றம்

**திறன்கள்** - குறுகியதூரத்தை இலகுவாக ஓடுவர் (கிட்டத்தட்ட 10 மீற்றர்)
காலகளை மாற்றி மாற்றி ஏறும் சட்டகத்தில் ஏறி கீழே இறங்குவர்.
குறுகிய தூரத்திற்குப் பாய்வர். (கிட்டத்தட்ட 2 அடிகள்)
சுயாதீனமாக ஊஞ்சலை மிதிப்பர்
சமநிலை தண்டின் மீது இலகுவாகப் பயணம் செய்வர்

**முன்னாயத்தம்** - ஆசிரியருக்கு அவதானிக்க முடியுமானளவு பிள்ளைகளின் எண்ணிக்கையுடன் (உச்சஅளவு 10) செயற்பாட்டுக்காக தயாராகுதல். (விளையாட்டு முற்றத்தில் பிள்ளை செலவிடுகின்ற முழு நேரத்தையும் ஆசிரியரின் அவதானித்துக்கு உட்படுத்த வேண்டும்)
விளையாட்டு முற்றத்தில் காணப்படும் உபகரணங்கள் பிள்ளைகளின் பயன்பாட்டிற்கு பொருத்தமான மட்டத்தில் காணப்படல் வேண்டும்.

**செயற்பாடு** - காலம் 45 நிமிடம் அளவில் பயன்படுத்த முடியும்

**படிமுறை 1** பிள்ளைகளை விளையாட்டு முற்றத்திற்கு அழைத்துச் செல்லவும்.

**படிமுறை 2** ஆசிரியர் பிள்ளைகளை விளையாட்டு முற்றத்தில் ஒவ்வொரு செயற்பாட்டிலும் ஈடுபடுத்துவது பொருத்தமானது. பிள்ளைகள் பல்வேறு உபகரணங்களுடன் விளையாடும் போது பிள்ளைகளை அண்மித்தவாறு அவதானிப்பதுடன் அது தொடர்பான குறிப்புக்களையும் வைத்திருக்க வேண்டும். சகல பிள்ளைகளையும் ஒவ்வொரு விளையாட்டிலும் சுமார் 10 நிமிடங்களுக்கு விளையாட வாய்ப்பளித்தல் போதுமானது (உதா: ஓடுதல், பாய்தல் போன்றவாறு)

**ஆசிரியரால் அவதானிக்க வேண்டியவை** -

1. யாருக்கு சிறிது தூரம் ஓட முடியும்?
2. யாருக்கு சிறிது தூரம் பாய முடியும்?
3. யாருக்கு ஏறும் சட்டகத்தில் கால்களை மாற்றி மாற்றி ஏறவும் இறங்கவும் முடியும்?
4. யாரால் ஊஞ்சல் ஆட முடியும்?
5. யாருக்கு சமநிலைப் பலகையில்/ தண்டில் சமநிலையில் செல்ல முடியும்?
6. யார் பாதுகாப்பாக உபகரணங்களை பயன்படுத்துகின்றனர்?
7. யார் ஒற்றுமையுடன் உபகரணங்களைப் பயன்படுத்துகின்றனர்?
8. யார் தனது தடவை வரும் வரை காத்திருக்கின்றார்?
9. யார் ஏனைய பிள்ளைகளுக்கு உதவ முன் வருகிறார்?
10. யார் ஒரு செயலிலிருந்து இன்னொரு செயலுக்கு இலவாக மாறுகின்றார்?

**முக்கியம்:-** ஆசிரியை கீழ் குறிப்பிடுகின்ற நடத்தைகளைக் காண்பிக்கின்ற மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி அதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. ஓடுவதற்கு/பாய்வதற்கு/ஊஞ்சலாட/ஏறுவதற்கு/இறங்குவதற்கு/சமநிலையில் செல்வதற்கு முடியாத பிள்ளைகள் - பிள்ளைகளின் குறை விருத்தி, அசாதாரண உடல் எடை, உடற் குறைபாடுகளால் இருக்கலாம்.
2. மூர்க்கக் குணமுடைய பிள்ளைகள் (பலவந்தமாக சந்தர்ப்பத்தை தனதாக்கிக் கொள்கின்ற, ஏனையோருக்கு வாய்ப்பு வழங்காத, ஏனையோரைக் கட்டுப்படுத்த முனைகின்ற பிள்ளைகள்)

# வெட்டி ஒட்டுவோம்

**பரப்பு** - நுண் இயக்கத் திறன்

**கருப்பொருள்** - வெட்டலும் ஒட்டலும்

**திறன்கள்** - கடதாசியையும், கத்தரிக்கோலையும் சரியாகப் பிடித்தல்.
வழங்கிய வரையறையினுள் (வட்டம்) நிறந்தீட்டுதல்.
கத்தரிக்கோலால் வரையறை நெடுகே (வட்டம்) வெட்டுதல்.
வெட்டிய வட்டத்தை கடதாசியிலுள்ள வட்டத்தின் மேல் நிற்கும் வண்ணம் ஒட்டுதல்

**தேவையான பொருட்கள்** - கத்தரிக்கோல், பசை, பெஸ்டல், வட்டம் வரையப்பட்ட இரண்டு வெள்ளைத் தாள்கள் (வட்டத்தின் விட்டம் சுமார் 4 அங்குலம்)

**இடம்** - வகுப்பறை

**செயற்பாடு** - பிள்ளைகளை 10 பேர் வீதம் குழுக்களாக்கவும், காலம் 30 நிமிடம் அளவு பயன்படுத்தவும்

**படிமுறை i** - பிள்ளைகளுக்கு வகுப்பறையில் ஒருவருக்கொருவர் ஓரளவு தூரமாக அமர்ந்துகொள்ள சொல்லவும்.

**படிமுறை ii** - இரண்டு வெள்ளைத் தாள்களிலும் ஒரே அளவான வட்டம் வீதம் வரைந்து (விட்டம் சுமார் 4'') சகல பிள்ளைகளுக்கும் வழங்கவும். (தாளை மேசையின் மீது வைக்கவும். கத்தரிக்கோலையும், பசையையும் பகிர்ந்தளிக்கவும்.)

**படிமுறை iii** - பிள்ளைகளுக்கு ஒரு பெஸ்டல் (பிள்ளைகளுக்கு விருப்பமான நிறம்) வீதம் வழங்கி, ஒரு வெள்ளைத்தாளில் வரைந்துள்ள வட்டத்தினுள் நிறந்தீட்ட சொல்லவும். வட்டத்தினுள் நிறந்தீட்டும் விதத்தை என அவதானிக்கவும்.

**படிமுறை iv** - வெள்ளைத் தாளில் நிறந் தீட்டிய வட்டத்தை கத்தரிக் கோலினால் வெட்ட சொல்லவும். கத்தரிக்கோலை பிடிக்கும் விதம், தாளைப் பிடிக்கும் விதம், வட்டத்தை வெட்டும் விதம் என்பவற்றை அவதானிக்கவும்.

**படிமுறை v** - வெட்டிய வட்டத்தை மற்ற தாளிலுள்ள வட்டத்தின் மீது ஒட்ட சொல்லவும். பிள்ளைகளுக்கு எந்தளவு தூரம் நிறந்தீட்டிய வட்டத்தை அடுத்த வட்டத்தின் மேல் சரியாக வைக்க முடியுமென அவதானிக்கவும்.

**படிமுறை vi** - ஒட்டிய தாளை மேசை மீது வைக்க சொல்லவும். அதனை நன்கு அவதானிக்கவும். உரிய விதத்தில் தகவல்களை குறித்துக் கொள்ளவும்.

**முக்கியம்:-** ஆசிரியை பின்வரும் நடத்தைகளைக் காண்பிக்கும் மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. கத்தரிக்கோலை அல்லது தாளை சரியாகப் பிடிக்க முடியாத பிள்ளைகள்.
2. வழங்கிய வரையறையிலேயே வெட்ட முடியாத பிள்ளைகள்.

## தாளை உருண்டையாக்குவோம்

**பரப்பு** - நுண் இயக்கத் திறன்

**கருப்பொருள்** - கிழித்தலும் உருண்டையாக்கலும்

**திறன்கள்** - கடதாசியை சிறுசிறு துண்டுகளாக கிழித்தல்.
கிழித்த துண்டுகளை உருளைகளாக உருண்டையாக்கல்.
உருண்டையாக்கிய உருளைகளை வழங்கியுள்ள உருவைச் சுற்றி ஒட்டுதல்.
உருவத்தின் முடிவு பற்றி கவனம் செலுத்துதல்.

**தேவையான பொருட்கள்** - ஒரு வட்டத்தின் உருவத்தை வரைந்துள்ள பச்சை நிற A4 தாள், வெள்ளை டிமைன்/ டிசூ தாள் வீதம், பசை, பிளாத்திக் பீங்கான் அல்லது யோகட் கோப்பை, ஒரு வட்டத்தின் உருவம் வீதம் (14cm விட்டம்)

**இடம்** - வகுப்பறை

**முன் ஆயத்தம்** - ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒரு வட்டம் வரைந்த பச்சை நிறத்தாள் வீதம் தயாரித்துக்கொள்ளல். ஆசிரியை கடதாசி உருண்டைகளை ஒட்டிய ஒரு மாதிரி வட்டத்தின் உருவத்தை தயாரித்து காட்சிப்படுத்துவது பொருத்தமானதாகும்..

**செயற்பாடு** - 30 நிமிடங்களை பயன்படுத்தவும்.

**படிமுறை I** - 10 பிள்ளைகள் வீதம் குழுக்களாக்கவும்.

**படிமுறை II** - 10 பிள்ளைகளையும் வகுப்பறையில் அமரச் செய்யுங்கள். பின்னர் பிள்ளைகளுக்கு வெள்ளை நிற டிசு தாள், வட்ட உருவமுள்ள பச்சைநிற தாள் வீதம் வழங்கவும்.

**படிமுறை III** வெள்ளை நிறத் தாளை சிறிய துண்டுகளாக கிழிக்கவும், அவற்றை சிறிய உருளைகளாக கசக்கவும் அறிவுறுத்தவும். கசக்கிய உருளைகளை பிளாத்திக் பீங்கானில் அல்லது யோகட் கோப்பையில் வைக்குமாறு அறிவுறுத்தவும். எந்தளவு தூரம் உருளைகளை சம்பூரணமாக தயாரித்துள்ளது என்பதை கண்காணிக்கவும்.

**படிமுறை IV** பிள்ளைகளுக்குத் தேவையான அளவு பசையைக் கொடுத்து, கசக்கிய கடதாசி உருளைகளை பச்சைத் தாளில் வரைந்துள்ள வட்டத்தைச் சுற்றி ஒட்ட சொல்லவும். (அவ்வாறு ஒட்டப்பட்ட மாதிரியைக் காட்டுங்கள்)

**படிமுறை V** - போதியளவு நேரத்தைப் பிள்ளைகளுக்கு வழங்கி கைகளைக் கழுவிக் கொள்ளச் செய்து அவர்களின் ஆக்கங்களை தமது மேசையின் மீது காட்சிப் படுத்த சொல்லவும்.

**படிமுறை VI** - பிள்ளைகளின் ஆக்கங்களை அவதானித்து பாராட்டுங்கள்.

**முக்கியம்:-** ஆசிரியை பின்வரும் நடத்தைகளைக் காண்பிக்கும் மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. கடதாசியைக் கிழிக்க முடியாத பிள்ளைகள்
2. கடதாசிகளால் சிறிய உருளைகளை விரல்களால் தயாரிக்க முடியாத பிள்ளைகள்.

## தாள் கிழிப்போம் - பூக்கள் செய்வோம்

**பரப்பு** - நுண்ணியக்கத் திறன்

**கருப்பொருள்** - விரல்களினால் தாளைக் கிழித்தல்

**திறன்கள்**
- தாளின் நீளப் பாட்டில் ஒரு வரியை மடித்தல்
- தாளை குறுக்கு வாக்கில் சிறு சிறு வரிகளாக கிழித்தல்
- வரிகளாக கிழித்த பின்னர் அதனை பூ போன்று ஒன்று சேர்த்தல்
- பூக்களை அசைக்கும் தாளத்துக்கு ஏற்ப இயங்குதல்

**தேவையான பொருட்கள்** - ஒரே அளவில் வெட்டிய நிற டிமைன் தாள் (டிமைன் தாளை A4 அளவில் பகுதிகளாக வெட்டிக்கொள்ளவும்.)

**இடம்** - வகுப்பறை

**நேரம்** - 15 நிமிடங்கள் பயன்படுத்தவும்.

**படிமுறை I** – பிள்ளைகளை 10 பேர் வீதம் குழுக்களாகப் பிரிக்கவும்

**படிமுறை II** - ஒரு குழுவை வகுப்பறைக்கு எடுத்து ஆசிரியர் மேசைக்கு முன் அரை வட்டமாக மேசைகளையும் கதிரைகளையும் தயாரித்து அமர்ந்துகொள்ள அறிவுறுத்தவும்

**படிமுறை III** - பிள்ளைகளுக்கு டிமைன் தாள் பகிர்ந்தளிக்கவும்

**படிமுறை IV** - மேசை மீது தாளைக் குறுக்கு வாக்கில் வைத்துக்கொள்ள சொல்லவும்

**படிமுறை V** - டிமைன் தாளின் கீழ்ப் பகுதியிலிருந்து சிறு (ஒரு அங்குல அளவு) வரியை மடிக்க அறிவுறுத்தி அதனை செய்தும் காட்டவும்.

**படிமுறை VI** - பின்னர் கடதாசியை குறுக்குப் பக்கமாக வைத்து மடித்த பகுதி வரை மேலிருந்து கீழ் நோக்கி வரிகளாக கிழிக்க சொல்லவும். அவற்றை கிழிக்கும் விதத்தைக் காண்பித்து பிள்ளைகளுக்கு அருகே சென்று கிழிக்கும் முறையைக் கண்காணிக்கவும்.

**படிமுறை VII** - இப்போது கிழித்த பகுதியின் கீழ் எஞ்சியுள்ள பகுதியால் (மடித்த பகுதி) பிடித்து பூ போன்று ஒன்று சேர்க்க கூறி, அதனை செய்யும் விதத்தைக் காண்பித்து, ஒவ்வொரு பிள்ளையிடமும் சென்று அவதானிக்கவும்.

**படிமுறை VIII** - தயாரித்த பூக்களை ஆட்டி ஆட்டி பிள்ளைகளுடன் பாட்டுப் பாடவும்

பூ பூ பூ　　　　பல வர்ணப் பூக்கள்
நாம் தயாரித்த பூக்கள்　　　　அழகான பூக்கள்
(பொருத்தமானதொரு பாட்டு)

**முக்கியம்:-** ஆசிரியை பின்வரும் நடத்தைகளைக் காண்பிக்கும் மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. பத்திரிகைத் தாளை கிழிக்க முடியாத பிள்ளைகள்

# பகுதிகளை இணைப்போம்

**பரப்பு** - புரிகைத் திறன்கள்

**கருப்பொருள்** - உருவத்தின் பகுதிகளை இணைத்தல்

**திறன்கள்** - இரண்டு பகுதிகளாக வெட்டிய உருவத்தை பூரணப்படுத்துதல்.

பூரணப்படுத்திய உருவின் பெயரைக் குறிப்பிடுதல்.

பெயர் குறித்த உருவைக் கற்பனை செய்து விபரிப்பார்.

**தேவையான பொருட்கள்** - இரண்டு பகுதிகளாக வெட்டிய மாம்பழத்தின் சாதாரண படம், ஆசிரியர் மேசை, கதிரை, பிள்ளைகளுக்கு அமர்ந்துகொள்ள சில பாய்கள்

**முன்னாயத்தம்** - 10 பிள்ளைகள் வீதம் குழுக்களாக அமைத்துக் கொள்ளவும்.

**இடம்** - வகுப்பறைக்குள் அல்லது வகுப்பறைக்கு வெளியே

**செயற்பாடு** - ஒரு பிள்ளைக்கு சுமார் 10 நிமிடம் அளவு போதுமானது.

**படிமுறை i** - முதலில் பிள்ளைகளுக்கு பாய்களில் வசதியாக அமர்நதுகொள்ள சொல்லவும். (ஒவ்வொரு பாய்களுக்குமிடையில் ஓரளவு இடைவெளி வைக்கவும்). அவர்களை வெவ்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுத்தவும்.

**படிமுறை ii** - ஒவ்வொருவரையும் அழைத்து மேசை மீது வைத்துள்ள படத்தின் இரண்டு பகுதிகளை பரீட்சித்து, அவற்றை ஒரு உருவமாக அமையும் வகையில் இணைக்க சொல்லவும்.

**படிமுறை iii** - ஒவ்வொருக்கும் இரண்டு பகுதிகளை இணைத்த பின் உருவாகும் உருவை இனங்காணவும், அதனைப் பெயரிடவும், அதை விபரிக்கவும் சந்தர்ப்பம் வழங்கவும். (பிள்ளைகளிடம் உரியவாறு கேள்விகளை முன்வைத்து பதில்களை பெற்றுக்கொள்ளவும்)

**படிமுறை iv** - உரியவாறு பிள்ளைகளின் திறன்களைக் குறித்துக்கொள்ளவும்.

**முக்கியம்:-** ஆசிரியை பின்வரும் நடத்தைகளைக் காண்பிக்கும் மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. இரண்டு பகுதிகளை இணைத்து உருவை அமைக்க முடியாத பிள்ளைகள்.
2. அமைத்த உருவை இனம் காண முடியாத பிள்ளைகள்.

# ஆக்கம் செய்வோம்

| | | |
|---|---|---|
| **பரப்பு** | - | புரிகைத் திறன்கள் |
| **கருப்பொருள்** | - | ஆக்கம் செய்தல் |
| **திறன்கள்** | - | தெரிவுசெய்த பொருட்களினால் இலகுவான ஆக்கத்தை செய்தல்.<br>அவ்வாக்கத்தைப் பெயரிடுதல்.<br>அவ்வாக்கத்தை விபரித்தல். |
| **தேவையான பொருட்கள்** | - | பில்டிங் புலக்ஸ், பல்வேறு வடிவிலான பலகைத் துண்டுகள், யோகட் கோப்பை, போத்தல் மூடி. சூழலால் பெறக்கூடிய பொருட்கள், போன்றவற்றை பிள்ளைகளுக்கு போதுமான அளவில் சேகரித்துக் கொள்க. |
| **இடம்** | - | வகுப்பறை அல்லது வேறு பொருத்தமான இடம். |
| **முன்னாயத்தம்** | - | சகல பொருட்களையும் பிள்ளைகளின் முன் குவியலாக வைக்கவும். பிள்ளைகளை 10 பேர் வீதம் குழுக்களாக அமைக்கவும். |
| **செயற்பாடு** | - | காலம் 30 நிமிடங்கள் அளவு போதுமானது. |
| **படிமுறை i** | - | பிள்ளைகளுக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருட்களைப் பயன்படுத்தி விரும்பியதை ஆக்க வழிப்படுத்தவும். (இருவர் வீதம் பொருட்களைத் தெரிவுசெய்ய வழிப்படுத்துவது சிறந்தது) |
| **படிமுறை ii** | - | சகல பிள்ளைகளுக்கும் தாம் விரும்புகின்ற பொருட்களை எடுத்துக் கொண்டு தமது இருக்கைகளுக்கு சென்று ஆக்கமொன்றினை செய்வதற்கு வாய்ப்பு வழங்கவும். மேலும் பொருட்கள் தேவைப்படின் அவற்றை பெற்றுக் கொள்ள வாய்ப்பு வழங்குக. |
| **படிமுறை iii** | - | ஆசிரியை பிள்ளைகளுக்கு அருகே சென்று அவர்கள் செய்யும் ஆக்கத்தை அவதானிக்கவும். |
| **படிமுறை iv** | - | ஆக்கத்தைப் பூரணப்படுத்தவதற்கேற்ப ஒவ்வொரு பிள்ளைகளிடம் சென்று ஆக்கம் தொடர்பாக வினவவும். (உதா: இந்த ஆக்கம் யாது? இதற்கு பெயரிடலாமா? இந்த ஆக்கத்தை விபரிக்குக, இவ்வாறான ஆக்கம் ஒன்றினை கண்டுள்ளீர்களா? போன்றவாறு வினாக்களை வினவ முடியும்) |
| **செயற்பாடு v** | - | செயற்பாட்டின் இறுதியில் குழுவிலுள்ள சகல பிள்ளைகளுக்கும் சகல ஆக்கங்களையும் காட்சிப்படுத்தி, அவற்றை பாராட்டவும். |

**முக்கியம்:-** ஆசிரியை பின்வரும் நடத்தைகளைக் காண்பிக்கும் மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. எல்லாப் பொருட்களையும் தனதாக்கிக் கொள்ள முயற்சிக்கும் பிள்ளைகள்.
2. ஆக்கத்தை உருவாக்க முடியாத பிள்ளைகள்.

## கோலங்களை இனங்காண்போம்.

**பரப்பு** - புரிகைத் திறன்

**கருப்பொருள்** - கோலங்கள் தொடர்பான விளக்கம்

**திறன்கள்** - ஆசிரியரின் அறிவுறுத்தல்களை சரியாக விளங்கி செயற்படுதல்
முதலாம் கோலத்திற்குரிய ஈர்க்கை சரியாக தெரிவு செய்தல்.
முதலாம் கோலத்தை சரியாகப் பூரணப்படுத்துதல்.
இரண்டாவது கோலத்திற்குரிய ஈர்க்கை சரியாகத் தெரிவு செய்தல்
இரண்டாவது கோலத்தை சரியாக பூரணப்படுத்துதல்

**தேவையான பொருட்கள்** -
சரிசமனான நீளமுள்ள ஈர்க்குகளில் பொருத்திய இரண்டு நிறப் பூக்கள் 07 உம் (4+3), ஒரே நிற நட்சத்திரங்கள் 4 உம், சந்திரன்கள் 3 வீதம், மண் நிரப்பிய சரிசமனான 6 டின்கள்


**இடம்** - வகுப்பறைக்கு வெளியே அருகிலுள்ள இடமொன்று

**முன்னாயத்தம்**- வெட்டிய பூக்கள், சந்திரன்கள், நட்சத்திரங்கள் ஆகியவற்றை ஈர்க்குகளில் பொருத்தவும். ரின்களை வெள்ளை அல்லது நிறக் கடதாசிகளால் மறைத்து மண் நிரப்பவும். உரிய இடத்துக்கு 03 சிறுவர் மேசைகளை எடுத்து செல்லவும். உருவங்களின் விட்டம் 4 அங்குலமாக இருக்க வேண்டும்.

**செயற்பாடு** - காலம் 30 நிமிடங்களைப் பயன்படுத்தவும்

**படிமுறை I** - பிள்ளைகளை 10 பேர் வீதம் குழுக்களாக்கவும்.

**படிமுறை II** - இங்கு காட்டியுள்ளவாறு மண் நிரப்பிய 5 ரின்களை இரண்டு நிற பூக்களைச் செருகியும் ஒரு ரின்னை பூ செருகாதும் மேசை மீது வைக்கவும்.





**படிமுறை III** ஈர்க்கில் செருகிய மஞ்சள் மற்றும் சிவப்பு பூக்கள் இரண்டை முன்னால் வைக்கவும்.

**படிமுறை IV** பிள்ளைகளை வகுப்பில் நிறுத்திவிட்டு ஒவ்வொரு பிள்ளை வீதம் செயற்பாட்டிற்கு குறித்த இடத்திற்கு அழைக்கவும். வகுப்பிலுள்ள பிள்ளைகளை பொருத்தமானதொரு செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.

**படிமுறை V** ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்கியுள்ள கோலத்துக்கேற்ப பொருத்தமான ஈர்க்கைத் தெரிந்தெடுத்து மணல் நிரப்பிய ரின்னில் செருகுமாறு அறிவுறுத்தவும். அடுத்த பிள்ளையை அழைக்க முன் மீண்டும் இறுதி ரின்னை வெறுமையாக்கி வைக்கவும். அல்லது ரின்களின் ஒழுங்கை மாற்றவும்.

**படிமுறை VI** சகல பிள்ளைகளும் ஈர்க்குகளை செருகி முடிக்கும் வரை காத்திருக்கவும். அவதானித்து குறித்துக் கொள்ளவும்.



**படிமுறை VII** படத்திலுள்ளவாறு நட்சத்திரம், சந்திரன் என கோலத்தை மாற்றி முன்பு போலவே வடிவங்களை டின்களில் செருகவும். எஞ்சிய இரு படங்களுள்ள இரண்டு ஈர்க்குகளையும் முன்னால் வைக்கவும். (இதற்கு ஒரே நிறத்தினாலான பூக்களையும், வண்ணத்துப் பூச்சிகளையும் பயன்படுத்தலாம்.) முன்பு போன்றே செயற்பாட்டைப் பூர்த்திசெய்து கண்கானிப்பைக் குறித்துக்கொள்ளவும்.

**முக்கியம்:-** ஆசிரியை பின்வரும் நடத்தைகளைக் காண்பிக்கும் மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. வழங்கிய கோலங்களை பூரணப்படுத்த முடியாத பிள்ளைகள்

# எண்ணுவோம்

**பரப்பு** - புரிகைத் திறன்கள்

**கருப்பொருள்** - கணிதவியல் திறன்கள்

**திறன்கள்** - படங்களை 1 – 5 வரை சரியாக விளக்கத்துடன் சரியாக எண்ணுவர்
முன்னாலும் பின்னாலும் உள்ள மிருக உருவத்தை பெயரிடுதல்
பிள்ளைக்கு அண்மையிலும் தூரத்திலுமுள்ள படத்தினைப் பெயரிடுதல்

**தேவையான பொருட்கள்** - முயலின் படங்கள் 5 (வேறு பிராணிகளையும் பயன்படுத்தலாம்) மற்றும் யானை, முயல், பூனை, நாய், குரங்கு போன்ற மிருகங்களின் உருவங்கள் உள்ளடங்கிய ஓரளவு பெரிய அளவிலான மிருகங்களின் 5 உருவங்கள் பலகை அல்லது அட்டையில் ஒட்டி பயன்படுத்துக.

**முன்னாயத்தம்** – சமனான 5 படங்களை பலகை அல்லது காட்போர்டில் ஒட்டிக் கொள்க. வேறுபடும் 5 படங்களை அதேபோல் ஒட்டி பலகைத் தடி அல்லது தடி மேல் இணைத்து ஒன்றுக்கொன்று சமமான தூரத்தில் நிலத்தில் நிறுத்திக் கொள்க.

**இடம்** - திறந்தவெளியில் பொருத்தமானதொரு இடம்.

**செயற்பாடு**

**படிமுறை I** - சமமான 05 மிருகங்களின் படங்களை மேசையின் மேல் வைக்கவும். பிள்ளைகள் 10 பேரை மேசைக்கு ஓரளவு தூரத்தில் வரிசையாக நிறுத்தவும்.

**படிமுறை II**- ஒவ்வொரு பிள்ளையும் மேசைக்கு அண்மையில் வந்து அதன் மேல் வைக்கப்பட்டுள்ள மிருகங்களை ஒன்றின் மேல் ஒன்று வைத்து எண்ணச் சொல்லவும். முதலாவது படத்தை வைக்கும் போது எத்தனை படங்கள்? மூன்றாவது படத்தை வைக்கும் போது எத்தனை படங்கள்? ஐந்தாவது படத்தை வைக்கும் போது எத்தனை படங்கள் என மீண்டும் விசாரித்து சரியான விடை தர முடியுமா? எனப் பார்க்கவும்.

**படிமுறை III**- சகல பிள்ளைகளும் படங்களை எண்ணியதன் பின்னர் மீண்டும் வரிசையாக நிறுத்தவும்.

**படிமுறை IV**- வேறுபடும் 05 மிருகங்களின் உருவங்களை பிள்ளைகளுக்கு நன்றாகப் பார்க்கக்கூடியவாறு ஒரு பக்கத்தை நோக்கியவாறு வைக்கவும். ஒவ்வொரு பிள்ளைகளையும் அவ்விடத்திற்கு அழைத்து ஒரு மிருகத்தின் பெயரை குறிப்பிட்டு 05 மிருக படங்களின் முன்னாலும் பின்னாலும் வைக்கப்பட்டுள்ள மிருக படங்களை பெயரிட கூறுமாறு சொல்லவும்.

**படிமுறை V** - அதன் பின் பிள்ளைகளுக்கு அண்மையில் உள்ளதும் தூரத்திலுள்ளதுமான மிருகங்களின் படங்களை பெயரிடக் கூறவும். (ஒரு பிள்ளை விடை கூறியதன் பின்னர் படங்கள் வைத்துள்ள இடங்களை மாற்றி அடுத்த பிள்ளையை அழைத்தல் பொருத்தமானதாகும்)

**படிமுறை VI** - இவ்வாறு 10 பிள்ளைகளும் விடை கூறியதன் பின்னர் அவர்களின் முயற்சியை மதிக்கவும்.

**முக்கியம்:-** ஆசிரியை பின்வரும் நடத்தைகளைக் காண்பிக்கும் மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. 1 – 5 வரை விளக்கத்துடன் எண்ண முடியாத பிள்ளைகள்
2. முன்னாலும், பின்னாலும் நிற்கின்ற மிருக உருவங்களை இனங்கான முடியாத பிள்ளைகள்

# செவிமடுப்போம்

| | | |
|---|---|---|
| பரப்பு | - | மொழித்திறன் |
| கருப்பொருள் | - | ஒலிகளை இனங்காணல் |
| திறன்கள் | - | குறிப்பிட்ட நேரத்துக்கு கண்களை மூடி ஒரே நிலையில் நிற்றல்.<br>அவதானமாக சூழலின் ஒலிகளுக்கு செவிமடுத்தல்.<br>செவிமடுத்து எளிய ஒலிகளை இனங்காணல்.<br>செவி மடுத்து ஒலி எழுப்பியவற்றைப் பெயரிடுதல். |
| தேவையான பொருட்கள் | - | பாய்கள் (பிள்ளைகளின் தொகைக்கேற்ப) ஒலி எழுப்பக்கூடிய பல்வேறு பொருட்கள் |
| | - | உதா:- இரண்டு சிரட்டைகள், 2 பலகைத் துண்டுகள்,<br>ரின் ஒன்றும் நாணயங்கள் சிலவும் (பிள்ளைகள் காணாதவாறு இப்பொருட்களை எடுத்துச் செல்லவும்.) |
| இடம் | - | பொருத்தமான திறந்தவெளி |
| நேரம் | - | நேரம் 30 நிமிடங்கள் மட்டும் பயன்படுத்துவது பொருத்தமாகும் |
| படிமுறை I | - | பிள்ளைகளை 5 பேர் வீதம் குழுக்களாக்கி ஒரு குழு வீதம் திறந்த வெளிக்கு அழைத்துச் செல்லவும். (அடுத்த பிள்ளைகளை 5 பேரினை பொருத்தமான வேறொரு செயற்பாட்டில் ஈடுபடுத்தவும்.) |
| படிமுறை II | - | பிள்ளைகளை பாய்களில் உட்கார சொல்லவும். |
| படிமுறை III | - | பிள்ளைகளுக்கு கண்களை மூடிக்கொண்டு சூழலிலிருந்து கேட்கின்ற ஒலிகளுக்கு செவிமடுக்க சொல்லவும். ஆசிரியையும் அவ் ஒலிகளுக்கு செவமடுக்க வேண்டும். ஒலி இல்லாதிருப்பின் அதனையும் ஆசிரியை இனங்காண வேண்டும். |
| படிமுறை IV | - | அடுத்ததாக ஆசிரியர்/ ஆசிரியை ஒவ்வொரு பிள்ளையாக தன்னருகே அழைத்து (குழுவாக அல்ல) அவர்கள் கேட்ட ஒலிகள் எவை என வினவி விடைகளைக் குறித்துக் கொண்டு அடுத்த படிமுறைக்குச் செல்லவும். |
| படிமுறை V | - | பிள்ளைகள் ஐவரும் விடையளித்த பின்னர் பாயில் அமர்ந்து மீண்டும் கண்களை மூடிக் கொள்ளுமாறு அவர்களுக்குக் கூறவும். |
| படிமுறை VI | - | அடுத்ததாக இரண்டு சிரட்டைகளை தட்டும் ஒலி, இரண்டு கரண்டிகளை தட்டும் ஒலி, ரின்னினுள் நாணயம் ஒன்று விழும் ஒலி போன்ற ஒன்றுக்கொன்று வித்தியாசமான மூன்று ஒலிகளை மாத்திரம் முன்வைக்கவும். ஒரே சப்தத்தை மூன்று முறைகளுக்கு வெளிப்படுத்தவது சிறந்தது. |
| படிமுறை VII | - | ஆசிரியை ஒவ்வொரு பிள்ளையாக தன்னருகே அழைத்து முன்வைத்த ஒலிகள் எழுப்பிய பொருட்கள் எவை என வினவவும். (இரண்டைப் பெயரிடுவது போதுமானது) |
| படிமுறைVIII | - | சரியாக விடையளித்ததா எனக் குறித்துக் கொள்ளவும். |

**முக்கியம் -** சுற்றாடலில் கேட்கும் ஒலி பற்றி முதலில் கேட்ட பிள்ளையிடம் செயற்கை ஒலிபற்றி கடைசியாகக் கேட்பது பொருத்தமானது

**முக்கியம்:-** ஆசிரியை பின்வரும் நடத்தைகளைக் காண்பிக்கும் மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. சிறிது நேரம் ஏதாவதொன்றுக்கு கவனம் செலுத்த முடியாத பிள்ளைகள்

## கதைப் புத்தகம் பார்ப்போம்

**பரப்பு** - மொழித்திறன்

**கருப்பொருள்** - அச்சுப் பொருட்கள் தொடர்பான விளக்கம்

**திறன்கள்** - புத்தகத்தை சரியான முறையில் பிடித்தல்.
புத்தகத்தின் பக்கங்களை சரியான பாட்டில் புரட்டுதல்
புத்தகத்தின் பக்கங்களிலுள்ள படங்களை எழுத்துக்களிலிருந்து வேறுபடுத்துதல்.
புத்தகத்தின் முதல் பக்கத்தையும் இறுதிப் பக்கத்தையும் இனங்காணல்.

**தேவையான பொருட்கள்**

பிள்ளையின் வயதுக்குப் பொருத்தமான பெரிய எழுத்துக்களும் படங்களும் உள்ள நான்கு பக்கங்களுக்கு மேற்படாத கதைப் புத்தகங்கள். மேசையும் பாய்களும் (பிள்ளைகள் அடிக்கடி பயன்படுத்தாத கதைப்புத்தகங்களை பயன்படுத்துவது மிகப் பொருத்தமானது)
பிள்ளைகளின் எண்ணிக்கைக்குப் (10 பேருக்கு) போதுமான அளவில் கதைப் புத்தகங்கள் இல்லாதிருப்பின் 5 பேர்களடங்கிய குழுக்களாக செயற்பாட்டைப் பூரணப்படுத்தவும்.

**இடம்** - வகுப்பறை அல்லது பொருத்தமான வெளியிடம்.

**செயற்பாடு** - காலம் 20 நிமிடங்கள் போதுமானது.

**படிமுறை** i - பிள்ளைகளை சுதந்திரமானதொரு இடத்துக்கு அழைத்துச் செல்லவும்.

ii - கதைப் புத்தகங்களை மாணவர்கள் முன் மேசை மீது வைக்கவும்.

iii தனக்கு விருப்பமான புத்தகமொன்றை எடுத்து பிள்ளைகளுக்கு வசதியாக பாயில் உட்கார சொல்லவும். (ஆசிரியருக்கு சகல மாணவர்களும் தெரியக் கூடிய விதத்தில் பாய்களை விரித்து வைக்கவும்)

iv - பிள்ளைகளுக்கு புத்தகத்தை கையிலெடுத்து அதனை சுதந்திரமாக பார்க்க சந்தர்ப்பம் வழங்கவும். பின், ஒவ்வொருவரிடமும் சென்று புத்தகத்தை சரியாக பிடிக்கிறார்களா? புத்தகத்தின் பக்கங்களை சரியான பாட்டில் புரட்டுகின்றனரா? புத்தகத்தை முறையாகக் கையாளுகின்றனரா? போன்ற விடயங்களை அவதானிக்கவும். ஆசிரியை பிள்ளைகளின் அருகே சென்று அல்லது அவர்களை தன்னிடம் அழைத்து இச்செயற்பாட்டை செய்யலாம்.

v - அவ்வாறே, ஆசிரியை/ ஆசிரியர் ஒவ்வொரு பிள்ளையிடமும்

(I) புத்தகத்தின் சில பக்கங்களின் எழுத்துக்களை, படங்களை காண்பிக்கவும், படங்களைப் பெயரிடவும் சொல்லவும்.

(II) புத்தகத்தின் முதல் பக்கத்தையும் இறுதிப் பக்கத்தையும் காண்பிக்க சொல்லவும்.

vi - பிள்ளைகளின் துலங்கல்களை உரிய படிவத்தில் குறித்துக் கொள்க.

**முக்கியம்:-** ஆசிரியை பின்வரும் நடத்தைகளைக் காண்பிக்கும் மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. படங்களை வேறுபடுத்தி இனங்காண முடியாத பிள்ளைகள்
2. புத்தகத்தை பத்திரிகையை சரியாக பிடிக்க முடியாத பிள்ளைகள்.

## ஒரு நிகழ்வை/ கதையைக் கட்டியெழுப்புவோம்.

| | | |
|---|---|---|
| **பரப்பு** | - | புரிகைத் திறன் |
| **கருப்பொருள்** | - | ஒழுங்குமுறைகளை இனங்காண்போம் |
| **திறன்கள்** | - | எளிய மூன்று படங்களிலுள்ளவற்றை இனங்காணல்.<br><br>எளிய 3 படங்களையும் தொடர்பேற்படக்கூடியவாறு ஒழுங்கு முறையில் வைத்தல்.<br><br>ஒழுங்கு முறையில் வைத்த 3 படங்களையும் தொடர்புபடுத்தி ஒரு நிகழ்வை/ கதையை முன்வைத்தல்.<br><br>கதையின்/ நிகழ்வின் படங்கள் மூன்றிலுள்ளவற்றுடன் தொடர்புபடுத்துதல். |
| **தேவையான பொருட்கள்** | - | தெளிவான, சிக்கலற்ற 3 சித்திரங்களுள்ள 3 அட்டைகள். (சித்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன) |
| **இடம்** | - | வகுப்பறை |
| **செயற்பாடு** | - | இச்செயற்பாட்டில் ஒரு தடவைக்கு 10 பிள்ளைகள் வீதம் பங்குபற்றச் செய்யலாம். ஒரு பிள்ளைக்கு 5-7 நிமிடங்கள் வழங்கவும். |
| **படிமுறை I** | – | ஒரு தடவைக்கு ஒரு பிள்ளை வீதம் ஆசிரியர் மேசையருகில் அழைத்து உட்கார வைத்து மேசை மீதுள்ள 3 பட அட்டைகளை அவதானிக்க சொல்லவும். அவற்றிலுள்ள சிலவற்றை பெயரிட சொல்லவும். |
| **படிமுறை II** | – | அந்த மூன்று படங்களையும் ஒரு கதையை/ நிகழ்வை கட்டியெழுப்பும் வகையில் ஒழுங்கு முறையில் வைக்க சொல்லவும். அதற்குப் போதிய கால அவகாசம் வழங்கவும். |
| **படிமுறை III** | - | ஒழுங்கு முறையில் வைத்துள்ள படங்களிலிருந்து ஆசிரியருக்கு மாத்திரம் கேட்கும் வகையில் ஒரு கதையை/ நிகழ்வை முன்வைக்க சொல்லவும். ஆசிரியர் பிள்ளையிள் கதையைக் கவனமாகச் செவிமடுக்க வேண்டும். பிள்ளைகள் கூறும் கதைக்கும் / நிகழ்வுக்கும் மூன்று படங்களுக்கும் இடையில் தொடர்புள்ளதா என கவனத்திற் கொள்ளவும். அதனடிப்படையில் பிள்ளைகளின் திறன்களை அனுமானித்துக்கொள்ளவும்.<br>(இங்கு படங்களின் ஒழுங்கு முறைக்கேற்ப மிகவும் எளிய கதையை/ நிகழ்வை முன்வைப்பது போதுமானதென கவனத்திற்கொள்ளவும்.) |

**முக்கியம்:-** ஆசிரியை பின்வரும் நடத்தைகளைக் காண்பிக்கும் மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. பட அட்டைகளிலுள்ளவற்றை இனங்காண முடியாத பிள்ளைகள்.

# சித்திரம் வரைவோம்

**பரப்பு** - இரசனைத் திறனும், மொழித் திறனும்

**கருப்பொருள்** - சித்திர ஆக்கம்

**திறன்கள்** - சூழலின் அழகை மதித்து கதைத்தல்.

சூழலில் கண்டவற்றை சித்திரமாக முன்வைத்தல்.

சித்திரத்தினூடாக பிரதிபலிப்பவற்றை பெயரிடுதல்

சித்திரத்தினூடாக பிரதிபலிப்பவை தொடர்பாக விபரித்தல்

சித்திரம் வரைந்து மகிழ்ச்சியடைதல்.

**தேவையான பொருட்கள்** - வெள்ளை நிற வரைதல் தாளும் பெஸ்டலும்

**முன்னாயத்தம்** ஆசிரியை ஆரம்பத்தில் பிள்ளைகளுக்கு பார்ப்பதற்குப் பொருத்தமான இடத்தை தெரிவுசெய்ய வேண்டும். அது சிக்கலற்ற இலகுவான அழகானதொரு இடமாக இருக்க வேண்டும். உதா : நீர் வீழ்ச்சி/ குளம்/ பூந்தோட்டம்/ பறவைகள்/ மீன்கள் போன்ற பல அம்சங்களுள்ள இடம் (சித்திரத்தை உருவாக்க)

**செயற்பாடு** ஒரு தடவைக்கு 10 பிள்ளைகள் அடங்கிய ஒரு குழுவை ஈடுபடுத்தலாம். சித்திரத்தை வரைவதற்கு 30-45 நிமிடங்களை செலவிடுவது உசிதமானது.

**படிமுறை i** நீர் வீழ்ச்சி, மரஞ் செடிகொடிகள், பூக்கள். பறவைகள், மீன் போன்று பிள்ளைகளுக்கு நெருக்கமான, அழகான இடமொன்றுக்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லவும். (பாடசாலையினுள் அல்லது பாடசாலைக்கு அண்மித்த இடமொன்றினை தெரிவு செய்து கொள்ளவும்)

**படி முறை ii** அவ்விடத்தில் காணப்படுபவை, அவற்றின் அழகு, அவற்றைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை பிள்ளைகளுடன் கலந்துரையாடவும். பிள்ளைகளிடம் குறித்த சூழல் பற்றி கேள்வி கேட்கவும்.

**படிமுறை iii** பிள்ளைகளை மீண்டும் வகுப்பறைக்கு அழைத்துச் சென்று தாம் கண்டவற்றில் தமக்கு பிடித்த, விருப்பமானதை வரையும் படி வழிப்படுத்தவும். வரைதல் தாளையும் பெஸ்டல் நிறங்களையும் வழங்கவும். (பிள்ளைகள் விரும்பிய நிற பெஸ்டல்களை வழங்கவும்).

**படிமுறை iv** சித்திரம் வரையும் போது பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் செயற்படுகின்றார்களா என கவனிக்கவும். சித்திரத்தை வரைந்து முடிந்த பின்னர் ஒவ்வொரு பிள்ளையினதும் அருகே சென்று வரைந்த படத்தை நன்கு அவதானித்து பின்வரும் வினாக்களை வினவவும்.

1. இச் சித்திரத்தில் என்ன காட்டப்பட்டுள்ளது? அதில் என்ன பொருட்கள் இருக்கின்றன? பிள்ளைகள் அவதானித்த சூழலில் அவதானித்தவைகள் இருந்தனவா?
2. ஏன் இந்தப் சித்திரத்தை வரைந்தீர்கள்? இதில் எதற்கு மிகவும் விருப்பம்? அதற்கு ஏன் விருப்பம்?

**படிமுறை v** வரைந்த சித்திரத்தைக் காட்சிப்படுத்த சந்தர்ப்பம் வழங்கி அதனை பாராட்டுதல்.

**முக்கியம்:-** ஆசிரியை பின்வரும் நடத்தைகளைக் காண்பிக்கும் மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. ஆசிரியர் கூறுபவற்றைக் கவனிக்காத, விளங்க முடியாத பிள்ளைகள்.
2. சித்திரத்தை விபரிக்க முடியாத பிள்ளைகள்.

## மகிழ்வோம்

பிள்ளைகளுக்கு இறுதி நாளன்று செயற்படுத்தப் பொருத்தமான செயற்பாடாகும். வகுப்பிலுள்ள அனைத்துப் பிள்ளைகளையும் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

**பரப்பு** - சமூகத் திறன்கள்

**கருப்பொருள்** - மேடையில் பாடுதல்.

**திறன்கள்** - வகுப்பில் முன்வந்து தனியாக பாடுதல்
பாடுவதற்கு அடுத்த பிள்ளைகளை ஊக்குவித்தல்
அடுத்த பிள்ளைகள் பாடுவதற்கு ஒத்துழைத்தல்
பாடுவதற்கு தனது தவணை வரையில் காத்திருத்தல்

**தேவையான பொருட்கள்** - மேடையை அலங்கரிக்க தேவையான பொருட்கள்.
மைக் ஒன்றின் மாதிரி

**இடம்** - வகுப்பறை அல்லது திறந்த வெளியில் அமைத்த மேடை

**முன்னாயத்தம்** - அழகான மேடையொன்றை வகுப்பின் ஒரு மூலையில் அல்லது சுயாதீனமான இடமொன்றில் அமைக்கவும்.

**நேரம்** - ஒரு பிள்ளைக்கு 5 நிமிடநேரம் போதுமானது.

**படிமுறை I** - சகலரையும் வகுப்பில் போதுமான இடமுள்ள இடத்தில் உட்கார்ந்துகொள்ள சொல்லவும்

**படிமுறை II** - வகுப்பில் அமைக்கப்பட்டுள்ள மேடையில் ஏறி தனக்கு விருப்பமான ஒரு பாடலைப் பாடவழிப்படுத்தவும்.

**படிமுறை III** - தானே முன்வந்து தன்னம்பிக்கையுடன் பாடலை முன்வைக்கும் பிள்ளைகளை இனங்கண்டு கொள்ளவும்.

**படிமுறை IV** - ஆசிரியரின் அல்லது ஏனைய பிள்ளைகளின் உதவியின்றி தனியாக பாடுகின்ற பிள்ளைகளை இனங்கண்டுகொள்ளவும்.

**படிமுறை V** - அடுத்த பிள்ளைகளைப் பாடுவதற்கு முற்படுத்துவதில் தலைமை வகிக்கின்ற பிள்ளைகள் இருப்பின் இனங்கண்டு குறித்துக்கொள்ளவும்.

**படிமுறை VI** - மேற்படி செயற்பாட்டால் மகிழ்ச்சியடையும்/ மகிழ்ச்சியடையாத பிள்ளைகளை இனங்கண்டு குறித்துக் கொள்ளுக. - இறுதியில் கைதட்டி பிரிந்துசெல்லவும்.

**முக்கியம்:-** ஆசிரியை பின்வரும் நடத்தைகளைக் காண்பிக்கும் மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. மேடையில் ஏறிப் பாட்டுப் பாடாத பிள்ளைகள்

**சுகாதாரமும், பழக்க வழக்கங்களும் மற்றும் கற்றலுக்குத் தேவையான திறன்கள்**

**ஆசிரியரால் சல செயற்பாடுகள் தொடர்பாகவும் பிள்ளைகளை அவதானித்து குறித்துக் கொள்ள வேண்டிய ஒரு செயற்பாடாகும்.**

**பரப்பு** - சுகாதாரமும், பழக்க வழக்கங்களும் கற்றலுக்கு தேவையான திறன்களும்

**திறன்கள்** -

1. வழக்கமாக உணவுக்கு முன்பும், பின்பும் சவர்க்காரமிட்டு கைகளைக் கழுவிக்கொள்ளல்
   வேறொவரின் உதவியின்றி உணவு உட்கொள்ளல்.
   உணவை/ தண்ணீரை வெளியே சிந்தாது முறையாக உண்ணல்.
   தலைமயிர், நகம், உடை சுத்தம் பற்றி கவனம் செலுத்துதல்.
   தனியாக இயற்கைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளல்.
   உதவி செய்வோருக்கு நன்றி செலுத்துதல்
   தனது தவறுகளுக்கு மன்னிப்புக் கோரல்

2. தான் வகுப்பில் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தியவற்றை முறைப்படி வைத்தல்
   அதிகமான செயற்பாடுகளை இறுதி வரையில் பூரணப்படுத்துதல்
   பெரும்பாலும் ஆர்வத்துடனும் அவதானமாகவும் செயற்பாடுகளில் ஈடுபடுதல்
   செயற்பாடுகளினூடாக செயற்பாடுகளுக்கு இலகுவாக மாறுவர்
   செயற்பாடுகளை பூரணமாக்கி மகிழ்ச்சியடைவர்

மேற்படி திறன்களை அவதானித்து அறிக்கை வைத்துக் கொள்வதற்காக விசேட செயற்பாடுகளேதும் இல்லை. பிள்ளையின் பாடசாலைக்கான தயார் நிலையை இனங்காண்பதற்கு ஒதுக்கியுள்ள மூன்று (03) நாட்களிலும் பொருத்தமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொண்டு மேற்படி திறன்களை இனங்காண வேண்டுமென எதிர்பார்ப்படுகின்றது. அவை தொடர்பாக உரியவாறு அறிக்கை செய்து கொள்ளுங்கள்.

**முக்கியம்:-** ஆசிரியை பின்வரும் நடத்தைகளைக் காண்பிக்கும் மாணவர்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

1. தனியாக இயற்கைத் தேவையை நிறைவேற்ற முடியாத பிள்ளைகள்
2. தனியாக உணவு உண்ண முடியாத பிள்ளைகள்
3. தலைமுடி, நகம், உடல் என்பவை சுத்தமற்ற பிள்ளைகள்